**சுருக்கம்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2012 – 2013–ஆம் ஆண்டு மானிய கோரிக்கை எண்.42–ன் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக் வளர்ச்சி அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – கிராம ஊராட்சி செயலர்களுக்கு மாதாந்திர நிரந்தரப் பயணப்படியாக ரூ.300/– ஊராட்சி நிதியிலிருந்து வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ5) துறை.**

**அரசாணை (நிலை) எண்:70**

**நாள்:07.08.2012.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.175, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 05.12.2006.
2. அரசாணை (நிலை) எண்.91, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.08.2009.
3. அரசாணை (நிலை) எண்.52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.08.2011.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித ந.க.எண்.99250/2010/இ3, நாள் 17.04.2012.

******

**ஆணை:**

09.04.2012 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானிய கோரிக்கை எண்.42–ன் மீதான விவாதத்தின் போது பதிலளித்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகம். மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண்.40–ல் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கிராம ஊராட்சி செயலர்களுக்கு மாதாந்திர நிரந்தரப் பயணப்படியாக ரூ.300/– ஊராட்சி நிதியிலிருந்து வழங்கப்படும்.''

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஊராட்சி உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயித்து, 01.09.2006 முதல் பயன்பெறும் வகையில் ஆணையிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், ஊராட்சி உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியமாக ரூ.2500 – 5000 + ரூ.500/– தர ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 'ஊராட்சி உதவியாளர்' என்ற பணியிடத்தின் பெயரினை 'ஊராட்சிச் செயலாளர்' என பெயர் மாற்றம் செய்தும், அவர்களின் பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.2500 – 5000 + தர ஊதியம் ரூ.500/– உடன், சிறப்புப் படியாக மாதம் ரூ.500/– வழங்கி ஆணையிடப்பட்டது.

(த.பி.பா.)

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட பணிகளை செவ்வனே செய்வதற்கு ஊராட்சி செயலாளர்கள் பணியாற்றும் கிராம ஊராட்சிகளிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்களுக்கும் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கும் அடிக்கடி சென்று வர அவசியம் ஏற்படுகின்றது. அனைத்து மாவட்டங்களிலும் அதன் தலைநகரங்களிலேயே உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. பலமுறை அவ்வலுவலகங்களுக்குச் சென்றுவரும் ஊராட்சி செயலர்களுக்கு பயணப்படி சலுகை ஏதும் நாளதுவரை இல்லை. இத்தேவையினை கருத்தில் கொண்டு ஊராட்சி தலைவர்களுக்கு வழங்கப்படுவது போல நிரந்தர பயணப்படியினை ஊராட்சி செயலர்களுக்கு வழங்கலாம் எனவும், இதற்கான செலவினத்தையும் கிராம ஊராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்து, இது தொடர்பான கருத்துருவினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசிற்கு அனுப்பியுள்ளார்.

5. மேற்காணும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமாக ஆய்வு செய்தது. அதன்படி, கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி செயலர்களுக்கு மாதாந்திர நிரந்தர பயணப்படியாக ரூ.300/– வழங்கி அரசு ஆணையிடுகிறது. இவ்வாணை, ஆணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

6. இதனால் ஏற்படும் செலவினம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படவேண்டும்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.39984/ஊ.வ./2012, நாள் 18.07.2012ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் (சென்னை நீங்கலாக).
இயக்குநர், உள்ளாட்சி நிதி கணக்குகள் துறை, சென்னை – 108.
இயக்குநர், கருவூலகங்கள் மற்றும் கணக்குகள் துறை, சென்னை – 15.
**நகல்**
நிதித் (ஊரக வளர்ச்சி / படிகள் / ஊ.பி./சி.எம்.பி.சி) துறை, சென்னை –9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அனைத்துப் பிரிவுகள்.
நிதி அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

[signature] 7/8/12
பிரிவு அலுவலர்.